பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 30 சனிக்கிழமை 16.09.2023 கதிர் 309

# சஜித்தே அடுத்த ஜனாதிபதி
# பிரபல சோதிடர் ஆரூடம்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச நிச்சயம் நியமிக்கப்படுவாரென பிரபல ஜோதிடர் சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாசவுக்கு கஜகேசரி எனும்சக்திவாய்ந்த இராஜயோகம் இருப்பதால்அவர்நாட்டின்ஆட்சியாளராக தெரிவுசெய்யப்படுவார்.

சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் இலங்கை அபிவிருத்தி அடையும். பொருளாதார மந்தநிலையில் இருந்து இலங்கை மீண்டுவரும்.

சஜித் பிரேமதாச அந்த விடயங்களை முன்னெடுப்பதற்கான ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியையும் தன் வசம் வைத்துள்ளார்.

இதற்கு முன்னர் அந்தப் பதவியில் சிங்களவர் ஒருவதே நியமிக்கப்பட்டிருந்தார். பண்ணைச் சுற்றுவட்டத்தில் நயினை நாகபூசனி அம்மன் சிலை வைக்கப்பட்ட விவகாரத்தில் பொலிஸாரைத் தூண்டிவிட்டுக் குழப்பங்களை ஏற்படுத்தினார் என்று அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது, அரச அதிகாரியான அவர் தேவையற்ற முறையில் இதன் மூலம் அரசியல் செய்து அமைதியைக் கெடுக்கிறார் என்கிற அழுத்தம் கொழும்புக்குக் ☞2

## பிரதமர் தினேஸ் - பஸில் நேரில் சந்தித்துப் பேச்சு

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக் ஷவுக்கும் இடையில் விசேடசந்திப்பொன்றுஇடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் பொது ஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அதன் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம், நாடாளுமன்ற ☞2

## நாணய நிதியத்தின் பரீட்சார்த்தக் களம் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையே

### சாடுகின்றார் வசந்த முதலிகே

ஆசிய பிராந்தியத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பான பரீட்சார்த்த நடவடிக்கையை சர்வதேச நாணய நிதியம் இலங்கையில் முன்னெடுப்பதாக மக்கள் போராட்டகளஅமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ள தோடு இலங்கைக்கு வழக்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முதற்தவணைப்பணம் மற்றும் உடன்பாடுகளின் அடைவு மட்டம் சம்பந்தமான மீளாய்வினை ஆரம்பித்துள்ள நிலையில் அது பற்றி நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் ☞2

## முன்னிலை சோசலிச் கட்சியை வேட்டையாடுவதற்கு சூழ்ச்சி

### அக் கட்சியின் தலைவரே தெரிவிப்பு

முன்னிலை சோசலிசக்கட்சியை வேட்டையாடுவதற்கான சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றதாகத் தெரிவித்த அக்கட்சியின் பொதுச்செயலாளர்குமார் குணரத்னம் எமது கட்சியினர் ஆயுதப் போராட்டத்துக்குதயாராகுவதாக புனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவதாகவும் சுட்டிக்காட் டியுள்ளார்.

முன்னிலை சோசலிச கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரகலய ☞2

## கடன்மறுசீரமைப்பு குறித்து அமைச்சர் மனுஷ விளக்கம்

கடன்மறுசீரமைப்புத் தொடர்பில்விளக்கமளித்துள்ளார் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புஅமைச்சர் மனுஷ நாணயக்காரஸ.

ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின்ஒப்பந்தத்தின் படியும், மற்றும் ☞2

## சுகாதாரத்துறையின் பாதிப்புக்கள் குறித்து மனித உரிமைகள் பேரவையில் முறையீடு

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ளபாதிப்புக்கள் குறித்து மனித உரிமைகள் பேரவையில் தான் முறையிட்டுள்ளார் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யப்பா பண்டார தெரிவித்துள்ளார்.

ஐ.நா..மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகையில் நேற்று உலக சுகாதாரஸ்தாபனப் ☞2

## தேர்தலை உடன் நடத்துங்கள் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

தேர்தல்கள்நடத்தப்படுவதன் ஊடாகவே மக்கள் ஆணை மீண்டும் வழங்கப்படும். அதன் மூலமே மக்கள் ஆட்;சி நிலைபெறும். எனவே உடன் தேர்தலை நடத்துங்கள்என்றுஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில்நேற்றையதினம்ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ☞2



## இனி இது .....

கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் அந்தப் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

அந்த வெற்றிடத்திற்கே பணிப்பாளராக சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டார். இதன் மூலம் ஒரே நேரத்தில் மத்தி மற்றும் மாகாண அரச நிர்வாகங்களில் அவர் பதவிகளை வகித்து வருகின்றார். அதாவது மத்திய அரச நிறுவனமான யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் என்கிற நியமனத்தையும் மாகாணசபையின் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் என்கிற பதவியையும் அவர் ஒரே நேரத்தில் வகித்து வருகின்றார்.

இது இன்னொருவருக்கு அந்தப் பதவி கிடைப்பதைத் தடை செய்யும் அதேநேரம் மாகாணசபைக்குள் மத்தியின் நிர்வாகத் தலையீட்டையும் அனுமதிக்கும் விதமாகவும் அமைந்துள்ளது என்கிற குற்றச்சாட்டு உண்டு.

இத்தகைய பின்னணியில் மருத்துவர் சத்தியமூர்த்தியை அந்தப் பதவியில் இருந்து அகற்றிப் புதியவர் ஒருவரை நியமிப்பதற்கு வடக்கின் அமைச்சர் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பதவிக்குப் புதியவர் ஒருவரை நியமிப்பதற்கு ஏதுவாக அவரது சம்மதமும் அமைச்சர் தரப்பினரால் பெறப்பட்டுள்ளது. கொழும்பில் சுகாதாரத்துறை அமைச்சரோடு கலந்துரையாடி, நிலமைகளை விளக்கி புதியவருக்கு நியமனக் கடிதங்களும் தயாராகிய நிலையில் திடீரென அது கைவிடப்பட்டுள்ளது.

மருத்துவர் சத்தியமூர்த்தியை மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றவேண்டாம் என்று தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் வழங்கிய உறுதியான கடிதமே அதற்குக் காரணம் என்று தெரிகிறது. அந்தப் பதவிக்கான நியமன அதிகாரம் மாகாண ஆளுநருக்கு உரியது என்கிற நிலையில் அவரது உறுதியான பரிந்துரைக் கடிதத்தை அடுத்து அந்தப் பதவிக்குப் புதியவரை நியமிக்கும் நடவடிக்கையை கொழும்பில் அமைச்சு நிறுத்திவிட்டது.

கைக்கெட்டியும் வாய்க்கெட்டாது போய்விட்டதைப் போன்று வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்து விட்டது போன்று கடைசி நேரத்தில் ஆளுநர் தலையிட்டு மாகாண சுகாதார பணிப்பாளர் நியமனத்தை நிறுத்தியதால் அமைச்சரும் அவரது தரப்பினரும் இப்போது ஆளுநர் மீது கடும் கோபத்தில் இருக்கின்றர். தமது அரசியல் பலத்தைக் காட்டும் வகையில் ஆளுநரை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன என்று அறிய முடிகின்றது.

வடக்கு ஆளுநராக வருவதற்குச் சம்மதமா என்று வடக்கில் ஏற்கனவே மாவட்டச் செயலராக இருந்தவரான பெண் அதிகாரி ஒருவரிடம் கேட்கப்பட்டிருக்கின்றது. தனக்கு ஏற்பட்டுள்ள நோயைக் காரணம் காட்டி ஆளுநர் பதவி வாய்ப்பை நிராகரித்துவிட்டார் அந்த அதிகாரி. அதையடுத்து பொருத்தமான மற்றொருவரைத் தேடும் படலத்தில் அமைச்சர் தரப்பு இப்போது மும்முரமாக இருக்கின்றது.

பார்ப்போம் உண்மையிலேயே யாருக்கு அரசியல் பலம் அதிகம் என்பதை!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சஜித்தே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணுகுமுறைகளைச் செய்யவல்ல சக்தியைக் கொண்டிருக்கின்றார் என்றார்.

## வேட்டையாடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்ட காலத்தில் மக்கள் சக்தி பற்றிய உரையாடல்கள் அதிகமாக இருந்தது. நாடாளுமன்றம் உட்பட மக்கள் பிரதிநிதித்துவ சபைகளுக்கு வெளியில் மக்களை மையப்படுத்திய சக்தியொன்று கட்டியெழுப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட் டது.

நாடு சுதந்திரமடைந்து 75 வருடகால மாகின்றபோதும் மக்கள் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் எவையும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. அனைத்தின மக்களும் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய வகையில் நடைமுறைப்படுத்தக் கூடியதொரு வேலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை.

மாறாக பொருளாதார நெருக்கடிகள் தலைதூக்கின. இனப்பிரச்சினை நீடிக்கச் செய்யப்பட்டது. அரசவளங்கள் விற்கப்பனை செய்யப்பட்டன. தேர்தல்கள் நடத்தப்பட்டு அதிகார வர்க்கத்தினரிடையே ஆட்சிப் பொறுப்புக்கள் கைமாற்றப்பட்டன.

ஆனால் ஆட்சிக்கு வந்தவர்களால் எவ்விதமான பிரச்சினைகளும் இதயசுத்தியுடன் அணுகப்பட்டு தீர்க்கப்படவில்லை. அதனால்தான் நாடாளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் சக்தியொன்று அவசியமென்ற விடயத்தினை நாம் ஏற்றுக்கொண்டோம். அதனை எமது கட்சியான முன்னிலை சோசலிசக் கட்சி பல இடங்களிலும் வலுவாக வெளிப்படுத்தியது. அது பற்றிய உரையாடல்களை ஆரம்பித்து வைத்தது.

இதனால், அச்சமடைந்துள்ள அதிகாரத்தரப்பினர் எம்மை வேட்டையாடும் நோக்கில் அக்கூற்றை திரிவுபடுத்தி சூழ்ச்சியான முறையில் திரிவுபடுத்தப்பட்ட பிரசாரத்தினை முன்னெடுத்துள்ளனர்.

அதாவது நாடாளுமன்றத்தை, தேர்தலை புறக்கணிக்கும் முன்னிலை சோசலிஷக் கட்சியினர் தேர்தலைவிட அரகலவின் ஊடாக ஆயுதப்போராட்டத்தின் மூலம் ஆட்சியைப் கைப்பற்றப்போவதாக பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னிலை சோசலிசக் கட்சியை வேட்டையாடும் நோக்கிலேயே சூழ்ச்சி திட்டம் கொண்ட பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் எமது நிலைப்பாடு அதுவல்ல. நாம் தேர்தலை எதிர்கொள்வோம். அதற்க தயாராகவே உள்ளோம். அந்த தேர்தல் மூலம் கிடைக்கும் மக்கள் சக்தி ஊடாக பலத்தை கட்டியெழுப்புவோம். அது பற்றியே பேசுகின்றோம் -என்றார்.

## பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, காமினி லொகுகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எஸ்.எம்.சந்திரசேன, சஞ்சீவ எதிரிமான்ன, பிரதமரின் செயலாளர் சட்டத்தரணி திஸ்ஸ ஐயவர்தன யாப்பா, பிரதிச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.

மேலும் குறித்த கலந்துரையாடலின்போது, அடுத்த ஆண்டுகான வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன் மற்றும் நிவாரணங்களுக்காக அதிகளவிலான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் அதிக நிவாரணங்களை வழங்க முன்மொழிந்துள்ளமை தொடர்பாகவும் பரஸ்பரம் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, கூட்டணி அரசியலின் பங்களிப்புகள், பொது நல வசதிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சுமை மற்றும் நிவாரணம், பொது நிறுவன முடிவுகளை எடுப்பதில் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடல், நிறுவன மறுசீரமைப்பு பிரச்சினைகள், ஊழியர் உரிமைகள், நலன் மற்றும் மானியம், சுகாதார சேவையில் உள்ள பிரச்சினைகள், போதைப் பொருள் பிரச்சினை, தேர்தல் முறைமை உட்பட பல்வேறு விடயங்கள் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக, சமுர்த்தி மானியம் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டுமென இரு தரப்பு ஏகமனதான வலியுறுத்தலை செய்ததோடு அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை கூட்டிணைந்து முன்னெடுப்பதெனவும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனியாகச் சந்தித்திருந்து பஷில் ராஜபக்ஷ தற்போது அவர் தற்போது வெளிநாட்டுப் பயணத்தினை மேற்கொண்டுள்ள நிலையில் தனது குழுவினருடன் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே இலங்கைக்குள் தனது பரீட்சாத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வரு கிறது. இதனை இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரே குறிப்பிட்டுள்ளார்.

## சுகாதாரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அதில் பங்கேற்பதற்காக நான் வருகை தந்திருக்கிறேன். இதன்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் சுகாதாரத்துறை வீழ்ச்சி அடைந் துள்ளமை சம்பந்தமாக அவர்களிடத்தில் நான் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன்.

எமது நாட்டில் சுகாதாரத்துறை பின்பற்றுகின்ற கொள்கை சம்பந்தமாக நாம் அறிந்திருக்கின்றோம். அந்தக் கொள்கைகளை அடியொற்றிய செயல்பாடுகள் காரணமாகவே மக்கள் பெரும் துயரத்துக்குள்ளாகி வருகிறார்கள்.

குறிப்பாக இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டபோது சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் பதிலளித்த முறைமை செயற்பட்ட விதம் உள்ளிட்டவை எமக்கு ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

அதேநேரம் நாட்டின் சுகாதாரத்துறை வீழ்ச்சி அடைந்தமையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், அதேநேரம் ஏனைய துறைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் உள்ளிட்டவை சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளேன்.

இலங்கையர்களைப் பொறுத்தவரையில் சுகாதாத்துறையானது பிரஜைகளின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்பு பட்டதாகும் என்பதை நினைவுபடுத்துகின்றேன் - என்றார்.

# பொலிஸாரை கண்காணிக்கும் பணியை மீண்டும் தொடங்குவதற்குத் தீர்மானம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

நாடளாவியரீதியில் பொலிஸ் நிலையங்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், இலங்கையில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள் கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக பொலிஸாருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

ஆகவே பொலிஸ் நிலையங்களை கண்காணிப்பதன் ஊடாக சந்தேகநபர்களை கைது செய்யும் வழிமுறைகள் மற்றும் கைதிகள் சித்திர வதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பான எதிர்மறையான விடயங்களை கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன், அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளையும் ஆணைக்குழுவால் முன்னெடுக்க முடியும் - என்றார்.

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாதமொரு முறை ஏதாவதொரு வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற பெரிய தேவை இருக்கின்றது. அவ்வாறு அவர் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் ஆணையுடன் அரசாங்கம் ஒன் றை அமைக்குமாறே முழு உலகமும் வலியுறுத்தி வருகின்றது.

மக்களின் எழுச்சி யால் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்ட அரசாங்கம் எப்படியான உதவிகளை கேட்டாலும் சர்வதேச நாடுகள் தமது ஒத்துழைப்புகளை வழங்காது. அவ்வாறு வழங்கப் போவதுமில்லை.

ஆகவே, மக்கள் ஆணையில்லாத அரசாங்கம் ஒன்றுக்கு சர்வதேச நாடுகள் உதவிகளை அளிக்காது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்ள வேண்டும்.

சர்வதேசத் தின் உதவிகளை பெற்றுக் கொள்ளவதாயின் மக்கள் ஆணையுடன் கூடிய ஆட்சியை அமைக்க வேண்டும். அதற்காக உரிய தேர்தல்களை நடத்தவேண்டும்.

தேர்தல்கள் நடத்தப்படுவதன் ஊடாகவே மக்கள் ஆணை மீண்டும் வழங்கப்படும். அதன் மூலமே மக்கள் ஆட்;சி நிலைபெறும். எனவே உடன் தேர்தலை நடத்துங்கள் - என்றார்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், தற்போது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகள் தயார்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புடன், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவ டிக்கை தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் வெளிநாட்டுக் கடன்களாகப் பெற்றிருப்பது, அந்தந்த நாடுகளின் மக்களின் வரிப்பணம். நாம் அது குறித்து கவனம் செலுத்த வேண்டும். அதனால், வெளிநாட்டுக் கடனை செலுத்த முடியாத நிலையில் உள்ள நாடு என்ற வகையில், உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காமல், வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் மறுசீரமைக்க இடமளிக்குமாறு கோரிக்கை விடுக்க எமக்கு வாய்ப்பில்லை. எனவே, உள்நாட்டுக் கடனை மறுசீமைப்பதும் கட்டாயம் ஆகும்.

நாம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மூலமாகவே அதிகளவில் உள்நாட்டுக் கடன்களைப் பெற்றுள்ளோம். அதனாலேயே, இது குறித்து விவாதம் ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஏன் வங்கிகளில் முன்னெடுக்கப்படவில்லை என்று சிலர் கேட்கிறார்கள்.

அதற்கு நாம் கூறக்கூடிய தெளிவான பதில் இதுதான், வங்கிகளுக்கு தொடர்ந்தும் சுமார் 30 சதவீத அளவில் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக வங்கிகளுக்கு இன்னும் சுமைகளை வழங்குவதன் மூலம் வங்கிகளில் கொடுக்கல் வாங்கல் செய்யும் பொது மக்களே பொருளாதார ரீதியாக மேலும் பாதிக்கப்படுவார்கள்.

அதற்கிணங்க, அட்சியாளர்கள் என்ற வகையில் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று, எதிர்வரும் காலத்திற்கு இந்த உள்நாட்டுக் கடன் மறுசீமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவோம். மேலும் பொது மக்கள் நிதியங்களின் உறுப்பினர்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்படாத வகையில் வாக்குறுதியளிக்கப்பட்ட 9 சதவீத நலனை எதிர் காலத்திலும் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அதன்படி, ஒருவருக்குச் சொந்தமான பணத்தில் 9 சதவீத வருடாந்தப் பயன் தொடர்ச்சியாக வழங்கப்படும். அது தவிர, 14 சதவீதம் அல்லது 30 சதவீத வரி விதிக்கப்படமாட்டாது. இதைப் பற்றிய உண்மைகளை சிலர் திரிவுபடுத்திக் கூறுகின்றனர். மக்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள்.

ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள பணத்தை முதலீடு செய்த பிறகு கிடைக்கும் இலாபத்திற்கே 14 சதவீத வரி விதிக்கப்படுகிறது.

நமது 2.4 மில்லியன் தொழிலாளர்களில், ஒருவருக்கு இன்று வங்கியில் 10 இலட்சம் ரூபா வைப்பிலிருந்தால், அந்தத் தொகைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அவர் தமது பணத்தைப் பெறும்போது, அவருக்கு அதற்காக ஆண்டுதோறும் 09ம சதவீதம் என்ற வகையில் சேர்க்கப்பட்ட நலனை வழங்கவும் தயாராக உள்ளோம்.

மேலும், உள்நாட்டுக்கடன் மறுசீரமைக்கப்படாவிட்டால் மாத்திரமே ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கு பாதிப்பு ஏற்படும். ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியம் தொடர்பில் உருவாக்கப்படும் கதைகள் வெறுமனே அரசியல் கதைகள் மட்டுமே. கதைகளை உருவாக்குபவர்களுக்கு எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை.

ஊழியர் சேமலாப நிதியம் உரித்தாகும் மத்திய வங்கி, ஒரு சுயாதீனமான நிறுவனமாக இருப்பதால், அதற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்பதை நம்பிக்கையுடன் கூறுகின்றேன். தொழில் அமைச்சின் ஊடாக இந்த நிதியம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது என்பதையும் நாம் பொறுப்புடன் தெரிவிக்க வேண்டும்.

மேலும், புலம்பெயர்ந்த தொழிலாளர் கொள்கையை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் டிஜிட்டல் தரவுக் கட்டமைப்பொன்றை அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து செயல்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோன்று, தொழில் திணைக்களத்தில் உள்ள அனைத்து தரவுக் கட்டமைப்புகளையும் டிஜிட்டல் மயமாக்குவதற்கான அனைத்துப் பணிகளும் இப்போது தயாராக உள்ளன. இதன் மூலம் ஈ-சம்பள முறையை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்ற உறுப்பினர் அதா உல்லா தலைமையில் சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்!

சாய்ந்தமருது பிரதேசசெயலகத்தின்ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் நெறிப்படுத்தலில் புதன்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் கடந்தகால மற்றும் நிகழ்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தோணா சுத்திகரிப்பும் அபிவிருத்தியும், மைதான அபிவிருத்தி, பாடசாலை மேம்பாடுகள், கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் உட்பட சமகால அபிவிருத்தி செயல் முறை தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில்கல்முனைமாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதேசசெயலகதிட்டமிடல்உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் நுஸ்ரத்பானு, சாய்ந்தமருது பெரிய பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஏ. ஹிபதுல் கரீம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவின் இணைப்பாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (05)

## 'சமுர்த்தி சிசுபல' திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு உபகரணங்கள்

### சாய்ந்தமருதில் வழங்கப்பட்டன













சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 179 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் நிதியின் கீழ் சமுர்த்தி அபிவிருத்திதிணைக்களம்நாடளாவிய ரீதியில் 2 லட்சம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தினூடாக பாடசாலை உபகரணங்களைவழங்கிவருகின்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் ஆகியோரின் வழிகாட்டலில் சமூக அபிவிருத்தி உதவியாளர்யூ.எல்.ஜஃபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ர்பீன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

## மந்துவில் படுகொலைகளின் 24ஆம் நினைவேந்தல் நேற்று



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் சந்திக்கு அருகாமையில் 1999ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுதாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களுடைய 24 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தாய்த் தமிழ் பேரவையின் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

24வது ஆண்டு வலிதீரா நினைவுகள் என்ற ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் இறந்தவர்களின் உறவுகளாலும் மக்களாலும் சுடரேற்றி மலர்தூவி கண்ணீருடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.



தாய்த்தமிழ் பேரவையின் நினைவேந்தல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நவநீதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் தாய்த்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.சத்தியரூபன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சி.குகனேசன் சமூக செயற்பாட்டாளர் த.லோகேஸ்வரன் மற்றும் பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உலக மக்களாட்சி நாள்

நேற்று – புரட்டாதி 15 – உலக மக்களாட்சி (ஜன நாயக)நாள். மக்களாட்சியின் அடிப்படையான வாக்குரிமையை மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ள இலங்கையில் அந்த நாள் எந்தவித ஆராவாரமும் இன்றிக் கவனிப்பும் இன்றிக் கடந்து சென்றுள்ளது.

அனைத்துலக மக்களாட்சி நாள் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. 2007 கார்த்திகை 8 நடந்த ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபைக் கூட்டத்தில்இந்தநாள்உலகநாளாகப்பிரகடனப்படுத்தியது.

மக்களாட்சி மாண்பை ஊக்குவிக்கும் முகமாகவும் அபிவிருத்தி செய்யவும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் போன்றவற்றிற்குரிய மதிப்பைக் கொடுக்கும் முகமாகவும் ஐ.நா. இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இப்பொதுத் தீர்மானத்தை 192 உறுப்பு நாடுகளும் அனுமதித்துள்ளன.

மேலும், உலகளாவிய ரீதியில் எந்தவொரு தனிமனிதனும்தனதுசொந்தஅரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார நடவடிக்கைகளை தனது வாழ்நாளில் அனுபவிக்கும் உரிமை கொண்டவன் என்பதை வலியுறுத்துவதும் ஐ.நா. இந்தப் பொதுச் சபையின் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

சகல நாடுகளினதும் பிரதிநிதிகள், ஐ.நா.வின் சகல அமைப்புகள், அரச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புகள் அனைத்தும் இத்தினத்தைக் கொண்டாட வேண்டுமென ஐநா கேட்டுள்ளது.

சர்வதேச மக்களாட்சி நாள் புரட்டாதி 15, 1997 அன்று தேசிய நாடாளுமன்றங்களின் உலகளாவிய அமைப்பான நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தால் (ஞூஊணஷீ) ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்த ஆண்டுகளில், கத்தார் சர்வதேச மக்களாட்சி நாளை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு தலைமை தாங்கியது. இறுதியாக, கார்த்திகை 8, 2007 அன்று, ‘புதிய அல்லது மறுசீரமைக்கப்பட்ட மக்களாட்சியை மேம்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் ஆட்சியாளர்களின் ஐக்கிய நாடுகளின் அமைப்பு முறையின் ஆதரவு‘ என்ற தலைப்பில் ஒருமித்த தீர்மானத்தின் மூலம் ஐ.நா. பொதுச் சபையில் இது தொடர்பான தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆண்டுகளுக்கு முன்பு மக்களாட்சி குறித்த உலகளாவிய அறிவிப்பை ஏற்றுக்கொண்டதை நினைவுகூரும்வகையில்புரட்டாதி15அன்றுஇந்தநிகழ்வை கொண்டாட வேண்டும் என்று நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம் பரிந்துரைத்தது. இதுபோன்றே முதல் கொண்டாட்டம் 2008 இல் நடந்தது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலையில் இந்தத்தினம்மிகமுக்கியமானது.ஏனெனில்மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படை உரிமையான தேர்தல்களை நடத்த மறுத்துவரும் ஓர் ஆட்சியின் கீழ் இந்தத் தடவை இந்த நாள் கடந்து சென்றுள்ளது. இதனால் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கவேண்டியவர்களாக உள்ளனர்.

தன்னுடைய சுய லாபத்திற்காக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் மறுத்து வருகின்றார்கள். இது தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டல்களையும் உதாசீனம் செய்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நீதிமன்றத்தின் உத்தரவை மீறி அரசுத் தலைவர் என்கிற நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் மிக மோசமான முறையில் பிற்போடப்பட்டுள்ளன. அவை இனி எப்போது நடைபெறும்என்கிறதிகதிகூடதெரியாமல்காலவரையறை இன்றிப் பிற்போடப்பட்டுள்ளன. இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாக அடுத்த வருடத்தில் அரசுத் தலைவருக்கான தேர்தலை நடத்துவதில் அக்கறை செலுத்தப்படுகின்றது.

இப்படி மக்களாட்சி இலங்கையில் கேலிக் கூத்தாக்கப்பட்டுவரும் நிலையில் உலக மக்களாட்சி நாள் கடந்து சென்றிருப்பது மிக முக்கியமானது. இந்தத் தினத்தில் மக்களாட்சியைப் பாதுகாப்பதற்கு அனைவரும் முன்வருவதும் அதற்காகப் போராடுவதும் மிக முக்கியமானது.



# ரணில்–அமெரிக்க உறவு

உபுல் ஜோசப் பெர்னாண்டோ



2003 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பிரதமராக கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதியாக ரணில் பொதுச் சபையில் கலந்துகொள்வது இதுவே முதல் தடவையாகும். ஐ.நா பொதுச் சபையில் உரையாற்றுவதற்கு முன்னர், அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனைச்சந்திப்பதற் கான வாய்ப்பைப் பெற ரணில் பெரும் முயற்சியை மேற் கொண்டார் என்று ஜனாதிபதி அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அதற்குப் பெரும் வரவேற்பு எதுவும் கிட்டியதாகத் தெரியவில்லை.

ரணில் பதவிக்கு வந்த தொடக்கத்தில் அமெரிக்காவிடம் நல்ல வரவேற்பை பெற்றார். ஆனால் அந்த நிலைமை தற்போதுமாறிவிட்டதாகத்தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றச் செல்லும் ரணிலுக்கு இம்முறை பைடனைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காது என்றே அரசியல் வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன. ரணில் ஜனாதிபதியாகப்பதவியேற்றவுடன் பைடனிடமிருந்து வாழ்த்துச் செய்தி வரும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது, ஆனால் பைடன் ரணிலுக்கு அப்படி ஒரு வாழ்த்து அனுப்பவேயில்லை. இருந்தாலும் ராஜபக்ஷக்கள் அல்லாமல் ரணில் அதிகாரத்திற்கு வந்ததில் வோஷிங்டன் கொஞ்சம் சாதகமான பிரதிபலிப்புக்களையே கொண்டிருந்தது. ஆனால், இப்போது அது மாறிவிட்டது.

பைடனிடம் இருந்து ரணிலுக்கு வாழ்த்து வராததற்கு கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கே காரணம் என்று ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் நம்புகின்றன. பைடனின் வாழ்த்துக்கு அவரே இடையூறு விளைவித்தார் என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இதனாலேயே, ரணில் தரப்பினர் ஜூலி சுங்கிற்கு எதிராகச் சமூக ஊடகங்களில் பரப்புரைகளைத் தொடங்கினர். ஆனால் சில மாதங்களுக்கு முன்னர் ரணில் தரப்பு ஜூலி சுங்குடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொண்டது. அதன் பின்னர் ஜூலி சுங் இலங்கையில் ஜனநாயகம் மற்றும் தேர்தல்கள் குறித்துத் தனது உத்தியோகபூர்வ ’ட்வீட்’ மூலம் கருத்து தெரிவிப்பதை நிறுத்தினார்.

அண்மையில் ரணில் யால காட்டுக்குச் சென்றபோது, அவருடன் அமெரிக்கத் தூதுவரும் காணப்பட்டார். ரணில் ஜூலி சுங்குடன் யால சுற்றுப் பயணத்தில் இணைந்தார் என்று அதனை இலங்கை ஊடகங்கள் தலைப்புச் செய்தியாக்கின. எதிர்க் கட்சிப் பக்கம் இருந்து ஆளும் தரப்புக்குத்தாவிய ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோவுடன் தலதா மாளிகையின் எசல பெரஹரவில் ஜூலி சுங் இருக்கும் ஒளிப்படங்களும் ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்தன. பெரஹர ஊர்வலத்தை ரணில் தனது மனைவியுடனும் ஜூலி சுங்குடனும் அமர்ந்து பார்க்கும் ஒளிப்படங்களும் ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டன. இந்தப் படங்களின் மூலம் ரணிலின் ஊடகப் பிரிவு ஜூலி சுங் தற்போது ரணிலின் நெருங்கிய நண்பராகி விட்டார் என்று காட்ட முயன்றது.

இப்படியெல்லாம் வித்தைகள் காட்டிய பின்னரும்கூட, அமெரிக்க அதிபர் பைடனைச் சந்திப்பதற்கான வாய்ப்பு ரணிலுக்கு வாய்க்கவில்லை. அவரது ஜூலி சுங்குடனான நட்பு பயனளிக்கவில்லை. நியூயோர்க் செல்வதற்கு முன் ரணில் கியூபா சென்றுள்ளார். ஜி-77 பிளஸ் சீனா மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் கியூபா செல்கிறார். கியூபா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இந்த மாநாட்டின் தலைமைத்துவத்தைப் பெற்றதன் மூலம் கியூபா தனதுபலத்தைஅமெரிக்காவிற்குக் காட்டியுள்ளது. இந்த மாநாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளே கலந்துகொள்கின்றன. அமெரிக்காவைக் கோபப்படுத்த விரும்பாததால் பெரும்பாலான நாடுகள் மாநாட்டி லிருந்து ஒதுங்கிவிட்டன என்று மேற்குலக ஊடகங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட நிலையில்தான் ரணில் அந்த மாநாட்டில் பங்கேற்கச் சென்றுள்ளார்.




கியூபாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான நெருங்கிய உறவு அமெரிக்காவை கவலையடையச்செய்துள்ளது. கியூபாவில் உளவொருங்கிணைவுத் தளத்தை உருவாக்க சீனா உதவியதாக ஜூன் மாதம் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

கியூபாவில் உள்ள அமெரிக்க எதிர்ப்பும், அமெரிக்காவின் கியூபனிச எதிர்ப்பும் தெரிந்துதான் ரணில் கியூபா செல்கிறார். இதன் பின்னர் ரணில் ஒக்டோபர் மாதம் சீனா செல்கிறார்.

அமெரிக்காவின் இதயத்தை வெல்ல அதனைக் காயப்படுத்திக்கொண்டே அவர் ஏன் முயற்சிக்கிறார் என்பதுதான் தெரியவில்லை.

காலைக்கதிர்
Kalaikkathir

# அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே போதைச் சவாலை முறியடிக்க முடியும்

## கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கருத்து

போதைப்பொருள்கடத்தல்வர்த்தகம் தொடர்பில்ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை அனைவரும் ஒன்றிணைந்தே இல்லாமல் செய்ய வேண்டும் என கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஆலோசனை குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

போதைப்பொருள் உள்ளிட்ட கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கை அதிகளவில் இடம்பெறும் பகுதியாக கல்முனை பிராந்தியம் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில், இப்பகுதியில் திறமையாக கடமையாற்றுகின்ற பொலிஸார் இந்தக் கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்துவிடுகின்றனர். இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கேரள கஞ்சா வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இங்கே விற்கப்படுகிறது. இதனூடாக கஞ்சாவுக்கு அதிகளவான இளைஞர்கள் அடிமையாகியுள்ளார்கள்.

அதைவிட தற்போது இலங்கைமேலும் பாரிய போதைப்பொருள் கடத்தல்களில் சிக்குகின்ற அபாய நிலையை அடைந்துள்ளது.

கொக்கெய்ன் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கை இலங்கையினூடாக அதிகரித்துள்ளது. இருந்தபோதிலும், அந்தக் கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

கொக்கெய்ன், கேரள கஞ்சா பல மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.



எனவே, இவ்வாறான சட்ட விரோத செயல்களை முறியடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறாயின், அதனை சாத்தியமாக்க முடியும். - என்றார். (05)

## நிலக்கரியுடன் கப்பல்கள் வருகை

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் மின்சார உற்பத்திக்காக 2023-24 இற்குத் தேவையான நிலக்கரி இறக்குமதியை ஆரம்பித்து வியாழக்கிழமை முதல் தொகுதி நிலக்கரி இறக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு மே மாதத்துக்குள் மேலும் 40 நிலக்கரி கப்பல்கள் இலங்கை வரவுள்ளன எனவும் இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 4 நிலக்கரி கப்பல்கள் இலங்கை வந்தன என்றும் அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார். (05)

# அலிசப்ரி ரஹீம் எம்.பி. மீது மற்றுமொரு குற்றச்சாட்டு



புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் அரசாங்கத்துக்குச் சொந்தமான 214 ஏக்கர் காணியை பல வருடங்களாக சட்டவிரோதமாக அனுபவித்து வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே இது தெரியவந்துள்ளது. மேலும், அந்தக் காணி தனியார் நிறுவனம் ஒன்று உப்பு உற்பத்திக்காக பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்துள்ளது.

மேலும், சுமார் 14 வருடங்களாக இந்தக் காணியிலிருந்து அரசாங்கத்துக்கு வரி செலுத்தப்படாமையால் சுமார் 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினருக்கு அறிவிக்கப்படும் என புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிந்தக மாயதுன்ன தெரிவித்தார். (05)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமானம்







இணுவில், கோண்டாவிலைச் சேர்ந்தலயன் துரைபிரணவச்செல்வன் வியாழக்கிழமை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இவர் பிரபல தொழிலதிபர் ஆவார்.

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகிய இவர், பல்வேறு சமய, சமூக அமைப்புக்களில் பதவி வகிக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
FESTA JUNINA
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# வவுனியா பல்கலை மாணவர் வரவேற்பு பதாகையில் தமிழ் மொழி புறக்கணிப்பு

## சிங்கள மயமாவதாகக் குற்றச்சாட்டு

வவுனியாபல்கலைக்கழகத்தின்மாணவர்வரவேற்புபதாதையில்தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக் கழகத்தில் 2021 (22) ஆம் வருடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி வவுனியா பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகியுள்ள பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களை உள்வாங்கும்நடவடிக்கைவவுனியா பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மாணவர்களைவரவேற்கும்முகமாகபல்கலைக்கழகவிடுதிமற்றும்அதனுடன் இணைந்த பகுதியில் வரவேற்பு பதாதைகள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த பதாதையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கில மொழியும் காணப்படுகின்றது. தமிழ்மொழி முற்றாக புறக் கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உள்ள இரண்டாவது பல்கலைக்கழகமும், தமிழ் மக் கள் வாழும் பகுதியில் உள்ள வன்னிக்கான பல்கலைக்கழகமுமான வவுனியா பல்கலைக் கழகம் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் முடிவதற்கு முன்னரே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சிங்கள மயமாக்கல் இடம்பெறுவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் சமூக வலைத்தளங்களில் விசனம் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




## 11 சிறுமிகளுக்கு பாலியல் தொந்தரவு குருணாகலில் ஆசிரியர் கைதானார்

குருணாகல் நகரில் உள்ள கலவன் பாடசாலை ஒன்றில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கும் பதினொரு சிறுமிகளுக்கு பாலியல் தொந்தரவு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துஹெர பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தேகத்துக்குரிய ஆசிரியர் மீது பெற்றோர்கள்பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தனது பாடத்தை கற்பிக்கும்போது வகுப்பில் உள்ள சிறுமிகளின் உடலைதொட்டு,அழுத்தி, அந்தரங்க உறுப்புகளை தொட்டு துஷ்பிரயோகம் செய்தார் எனவும் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மாணவிகள் இதுதொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து, அவர்கள்இதுதொடர்பாக குருணாகல் பொலிஸ் தலைமையகத்தின் சிறு வர் மற்றும் பெண்கள் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (05)

## துப்பாக்கியினைப் பறிக்கமுயன்ற ஹரக்கட்டாவுக்கு கடும் பாதுகாப்பு

குற்றத் தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகப் புள்ளியும்போதைப்பொருள் கடத்தல்காரருமான ஹரக்கட்டா, அதிரடிப் படையின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கைத்துப்பாக்கியை அபகரித்து தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்தையடுத்து அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக்காக விசேட அதிரடிப் படையின் 10 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள் ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 10ஆம்திகதி மாலை விசேட அதிரடிப்படையின் உப பரிசோதகரிடமிருந்த கைத்துப் பாக்கியை ஹரக்கட்டாபறிக்கமுற்பட்டசம்பவத்தை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)




# விடுமுறையில் வீடு வந்த ராணுவ சார்ஜன்ட் கைது

## துப்பாக்கிகள், வெடிபொருள்களும் பறிமுதல்

விடுமுறையில் வீடு திரும்பிய இராணுவ சார்ஜென்ட் ஒருவர், துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருள்களுடன் அம்பபொடை தென்னவில் கைது செய்யப்பட்டார் என ஹத்தரலியத்த பொலிஸார் தெரிவித்தனர். இவரிடமிருந்து ரி-56 துப்பாக்கிகள், தோட்டாக்கள் உட்பட பல வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஹத்தரலியத்தை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)

# லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மூக்குக்கண்ணாடிகள்




சுன்னாகம் லயன்ஸ் கழகம் மற்றும் கைதடி லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை சுன்னாகம், கந்தரோடை கற்பக்குணையில் உள்ள கலைமதி சனசமூக நிலைய மண்டபத்தில் லயன் மகாதேவா - பூமாதேவி ஞாபகார்த்தமாக இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்பட உள்ளது.

இலவசமாகக் கண் பரிசோதிக்கப்பட்டு, கண்ணாடி வழங்கும் இந்த நிகழ்வில் தேவையுடைய அனைவரும் வந்து பயன்பெறுமாறு லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர். (05)

# வீட்டுக் கூரையை உடைத்து காத்தான்குடியில் திருட்டு

## 4 இளைஞர்கள் கைது





உரிமையாளர்கள் வீட்டிலில்லாத போது வீட்டு கூரையை உடைத்து வீட்டினுள் இறங்கி நகைகளைத் திருடிய 4 இளைஞர்களைக் காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள டீன் வீதியில் வீடொன்றின் உரிமையாளர்கள் கொழும்புக்குச் சென்றிருப்பதை அறிந்த திருடர்கள் வீட்டின் கூரை மீது ஏறி கூரையை உடைத்து உள்ளே இறங்கி அலுமாரியை உடைத்து 2 செயின், 2 பெண்டன், 1 கராம்பு சோடி, 1 டசல், 3 மோதிரம், 2 மின்னித் தோடுகள் மற்றும் 2000 ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

புதன்கிழமை மாலை காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது திருடப்பட்ட நகைகளை மூதூரிலுள்ள நகைக்கடையொன்றில் விற்பனை செய்துள்ள நிலையில் அக்கடையிலிருந்து நகைகள் மீட்கப்பட்டதுடன் நகை கடை உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள காத்தான் குடியைச் சேர்ந்த 23, 19, 17, 19 ஆகிய வயதுடைய நான்கு நபர்களையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மலையகத்துக்கு பயணம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பையேற்று



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் அழைப்பையேற்று, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ், மலையகத்துக்கு கண்காணிப்பு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி, அமைச்சர் ஜீவன் தொண்டமானை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியப வானில் வியாழக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதொகாவின் சர்வதேச விவகார பொறுப்பாளரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க, பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சமகால அரசியல் மற்றும் பொருளாதார நிலைவரம் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மலையக தமிழர்களின் வரலாறு, அவர்களுக்கு குடியுரிமை பெற்றுக் கொடுப்பதற்காக இ.தொ.கா. முன்னெடுத்த போராட்டங்கள், மலையகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ள மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஐ.நா. பிரதிநிதிக்கு தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

காப்புறுதி, காணி உரிமை உட்பட ஜீவன் தொண்டமான் வகிக்கும் அமைச்சின் ஊடாக தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் சம்பந்தமாகவும், அதற்கு ஐ.நா. மற்றும் அதன் கீழ் இயங்கும் கிளை அலுவலகங்களின் உதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது சம்பந்தமாக வும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சரின் அழைப்பையேற்று நுவரெலியா மாவட்டம் உட்பட மலையகப் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கு ஐ.நா. வதிவிட பிரதிநிதி உறுதியளித்துள்ளார். (05)

# நீதிமன்றத்தின் சுயாதீனத்துவத்தை திட்டமிட்டுக் கட்டுப்படுத்தும் செயல்

## சட்டத்தரணிகள் கூட்டிணைவு கடும் அதிருப்தி

நீதிபதிகளால் அவர்களுக்காகப் பேசமுடியாது என்பதை நன்கு அறிந்துகொண்டு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையின்கீழ் நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிடும் போக்கு நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்கும் செயலாகும் என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சட்டத்தரணிகள் கூட்டிணைவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரின்ஸி அர்ஸகுலரத்ன, உபுல் ஜயசூரிய, ஜயம்பதி விக்ரமரத்ன, ஜெப்ரி அழகரத்னம், தினால் பிலிப்ஸ் மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் கையெழுத்திட்டு வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின் ஊடாகவே மேற்கண்டவாறு அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

'நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குறிப்பிட்ட சில வழக்குகளுடன் தொடர்புடைய நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளை அண்மையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கோள் காண்பித்த சம்பவங்கள் குறித்து நாம் மிகுந்த கரிசனையடைகின்றோம்' என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 8 ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் ஹொரணை நீதிமன்ற அதிகாரி தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்து, கடந்த மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் முல்லைத்தீவு நீதிவான் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்து மற்றும் நீதிபதியொருவரின் பெயரைக் குறிப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வெளியிட்ட கருத்து என்பனவற்றை அவ்வறிக்கையில் மேற்கோள் காண்பித்துள்ள அக்கூட்டிணைவு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து சம்பந்தப்பட்ட நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்கு அழைத்து கேள்வி எழுப்பவேண்டும் என விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'இச்சம்பவங்கள் தமது கடமையை சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான முறையில் முன்னெடுப்பதற்கு நீதிமன்றக்கட்டமைப்பு கொண்டிருக்கும் இயலுமையைத் திட்டமிட்டவகையில் கட்டுப்படுத்தும் போக்கு மேலோங்கிவருவதையே புலப்படுத்துகின்றன. நீதிபதிகளால் அவர்களுக்காகப் பேசமுடியாது என்பதை நன்கு அறிந்துகொண்டு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையின்கீழ் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது நீதிமன்ற சுயாதீனத்துவத்தை அவமதிக்கும் செயலாகும்' என்றும் சட்டத்தரணிகள் கூட்டிணைவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு அவசியமான நீதிக்கட்டமைப்பின் சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்குரிய அனைத்துத் தலையீடுகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக மேற் கொள்ளவேண்டும் என்று சட்டத்தரணிகள் கூட்டிணைவு உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (05)

# 60 விமானிகள் ஒரு வருடகாலத்தில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

## நெருக்கடியில் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்




ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் 60 விமானிகள் கடந்த ஒருவருடகாலப்பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதால் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் புதிதாக விமானிகளை பணிக்கு அமர்த்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தேவைப்பட்டால் வெளிநாட்டு விமானிகளை பணிக்கு அமர்த்துவதற்கான அனுமதியை அரசாங்கத்திடமிருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பெற்றுள்ளது.

இதனை ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதம நிறைவேற்று அதிகாரிரிச்சர்ட் நட்டால் உறுதி செய்துள்ளார்.

ஏற்கனவே நட்டத்தில் இயங்கிய ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் இலங்கை கடந்த வருடம் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் விமானிகள் பலர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இலங்கையின் அந்நியசெலவாணி நெருக்கடியும் உயர்வரிகளை விதிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டமும் விமானிகள் நாட்டிலிருந்து வெளியேறும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு விமானிகள் வெளியேறியமை ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் தனக்கான விமானிகளை பேணுவதில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வருடம் 30 விமானிகள் தேவை அடுத்த வருடம் நடுப்பகுதிக்குள் 50 விமானிகள் தேவை என ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதிர்ஷ்டவசமாக தென்கிழக்கு ஆசியாவிலும் வடகிழக்கு ஐரோப்பாவிலும் திறமையான விமானிகள் உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு விமானிகளை பணிக்கு அமர்த்துவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# ஆலய அலங்கார பணியில் ஈடுபட்ட இளைஞர்களைத் தாக்கிய கும்பல்

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைந்துள்ள ஆதி விநாயகர் ஆலயத்தில் திருவிழாவை முன்னிட்டு புதன்கிழமை இரவு அலங்காரபணிகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மீது அதே கிராமத்தைச் சேர்ந்த ரவுடிக்கும்பல் ஒன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நான்கு இளைஞர்கள் உடனடியாக அவசர அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவருக்கு வியாழக்கிழமை அவசரமாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த காடையர் குழுவினர் தொடர்ச்சியாக பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்ற குழுவினர் என்றும் கடந்த காலங்களில் பல தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கும் பொது மக்கள் இந்தக் குழுவினரால் கிராமத்தில் நிம்மதியற்ற நிலைமை உருவாகியுள்ளது என்றும் கவலை தெரிவித்துள்ளனர். கஞ்சா, கசிப்பு என சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இந்தக் குழுவினர் தங்களது செயற்பாடுகளுக்கு இடையூறாக இருப்பவர்கள் மீது தாக்குதல் நடத்துவது அவர்களை அச்சுறுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றபோது பொலிஸாரால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை இவர்கள் மீது மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் குழுவினர் மீது பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (05)

# For Earth, For Life

Kubota

133 YEARS OF EXECELLEGE

# குபோடா ஜோகாசோ கழிவுநீர் சுத்திகரிப்பு சாதனம்

**வீடு, அடுக்குமாடி குடியிருப்பு, அலுவலகம், தொழிற்சாலை, விடுதி, மருத்துவமனை, பொதுப்பகுதிக்கு ஏற்றது**

1. முற்றிலும் சீல் வைக்கப்பட்டது.
2. துர் நாற்றம் அற்றது
3. அனைத்து கழிவுகளும் ஒரே தொட்டியில்
   கழிப்பறை, குளியலறை, சமையலறை மற்றும் சலவை
4. கச்சிதமானது
   நிலத்தடியில் நிறுவ ஏற்றது - இடத்தை சேமிக்கும்
5. இயற்கை செயல்முறை
   இரசாயனம் பயன்படுத்தப்படாது
   மின்சாரம் தேவையில்லை
6. சுற்றுசூழல் நட்பு
7. குறைவான பராமரிப்பு
8. சுத்திகரிக்கப்பட்ட நீரை மீண்டும் பயன்படுத்லாம்
9. பின்வரும் நிலங்களுக்கு ஏற்றது
   அதிக நிலத்தடி நீர்மட்டம், சதுப்பு நிலப்பரப்பு, பாறை மேற்பரப்பு.

www.kubota.com



MADE IN JAPAN



FOR SRI LANKA

075 315 12 46
ecojaffna@gmail.com
www.fes.lk

*Exclusive Sole Distributor - Sri Lanka*

## Fukada Environment Solutions (Pvt) Ltd.

92 A, G.H. Perera Mawatha, Rattnapitiya, Boralesgamuwa, Sri Lanka

**Head Office:** 2-18-8 Komodahigashi, Iizuka City, Fukuoka, Japan

Central Environmental Authority
**Registered Consultant**

**52 YEARS**
IN SEWERAGE & WASTE WATER MANAGEMENT IN JAPAN

வடக்கு மாகாண அமைப்பு மற்றும் தொடர்புகளுக்கு
**Goodgift Property Developers Pvt Ltd**
No. 68,Crossette Lane, Jaffna.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் சிங்களப் புதுவருடத்தின் போது பிரதான எதிர்க்கட்சி நிலைத்திருக்காது

## வஜிர அபேவர்த்தன ஆரூடம்

எதிர்க்கட்சியில்இருக்கும்பிரதான அரசியல் கட்சி எதிர்வரும் தமிழ் சிங்கள புதுவருடமாகும்போது நிலைத்திருக்காது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் தலைமையக மான சிறிகொத்தவில் இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரி விக்கையில் -

விரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறுமா என சிலர் என்னிடம் கேட்கின்றனர். ஆனால் நாட்டின் பொருளாதார நிலையில் எதிர் வரும் வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தல் ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்தாலும் மக்களுக்குத் தேவையான எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படும். அதனால் ஆரம்பமாக நாங்கள் பொருளாதாரத்தை பலப்படுத்தி க்கொண்டு, தேர்தலை நடத்து-வதற்குத் தேவையான நிதியை தேடிக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் எந்தவொரு தேர்தலையும் நடத்த எங்களுக்கு முடியுமாக இருக்கும்.

அத்துடன் நாட்டில் இருக்கும் பழைய அரசியல் முறைமையில் நாட்டின் ஆட்சியை கைப்பற்றவோ அல்லது தொடர்ந்தும் நாட்டை முன்னுக்கு கொண்டு செல்லவோ முடியாது. ஜனாதிபதியும் இந்த விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால் நாங்கள் புதிதாக சிந்தித்து, சர்வதேசத்துடன் இணங்கிச்செல்ல முடியுமான வகையில் எமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் எதிர்க்கட்சி தொடர்ந்தும் பழைய அரசியல் முறைமைகளையே செயற்படுத்தி வருகிறது. அவர்களின் செயற்பாடுகள் தற்காலிகமானதாகும். எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் நாடு மீண்டும் கஷ்ட நிலைக்கே செல்லும். இவர்க ளின் இவ்வாறான நடவடிக்கை காரணமாக எதிர்க்கட்சியில் இருக்கும் பிரதான அரசியல் கட்சி அடுத்துவரும் தமிழ் சிங்கள புதுவருடமாகும் போது நிலைத்திருக்க முடியாமல் இல்லா மல் போகும். - என்றார். (05)

# மனித எச்சங்களை மறைக்கவே அவற்றின் மீது விகாரைகள்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

மனித எச்சங்கள் காணப்ப டுவதை மறைப்பதற்காகவே பௌத்த விகாரைகளை அமை த்தும் இராணுவம் நிலங்களை கையகப்படுத்தியும் வருகின்றார்கள் என்ற சந்தேகம் எழுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கம் அமைப்பின் தலைவரு மான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவி-யலாளர் எழுப்பிய கேள்விக்கு பதி லளிக்கும்போதே அவர் இதனைத்



தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொக்குதொடுவாயில் மனித புதைக்குழிகளில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தென்னிலங்கை தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ள ன என்றும் ஒவ்வொரு இடத்தி லும் மனித எச்சங்களை கண்டு பிடித்து கிடப்பில் போடும் நிலையே இலங்கையில் காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தை எடுக்க வேண்டும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக் காட்டியுள்ளார். (05)

# பதவி நியமனங்கள்

வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளராக ஏ.மன்சூர் மற் றும் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம்.நசீர் ஆகியோருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநராக பதவியேற்ற செந்தில் தொண்டமான் அவர்களின் இற்றைவரையான காலப்பகுதியில் மதம் சார்ந்து எந்த நியமனங்களையும் வழங்கவில் லை, தகுதி மற்றும் திறமைகளை அடிப்படையாகக் கொண்டே அரச நியமனங்களை அவர் வழங்கி வருகின்றார் என கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித் துள்ளது.

மேலும், கிழக்கு மாகாணத்தின் அனைத்து நியமனங்கள் மற்றும் இட மாற்றங்கள் முஸ்லிம்களின் கையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# வலுவூட்டல் செயலமர்வு

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிம னைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தி யோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக்கோவை தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு வியாழக் கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை யின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வு பணிமனையின் நிர்வாக உத்தி யோகத்தர் திருமதி எம்.எஸ். வீ.வஜிதாவால் இணைப்புச் செய்-யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.அப்துல் வாஜித், பொத்துவில் பிரதேச செயலக உத விப் பிரதேச செயலாளர் எம்.ரາம குட்டி, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வஜிதா ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

சுகாதார நிறுவனங்களில் பணி யாற்றுகின்ற குறித்த உத்தி யோகத்தர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய நிர்வாக நடைமுறைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள், சுகாதாரத் துறைக்கு ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும் வளவாளர்களால் இந்நிகழ்வின்போது விரிவுரை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (05)

# தேர்தலை மனதில் கொண்டு கதைக்கிறார் செல்வம் எம்பி

## ஈ.பி.டி.பி. ரங்கன் சாட்டை

'பௌத்தர்களே இல்லாத பிரதேசங்களில் எதற்கு விகாரைகள்?' என ஈழமக் கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஜயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் கேள்வி எழுப் பியுள்ளார். யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கில் மனித புதைகுழிகள் மீதே விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதாக, அண்மையில் கருத்து வெளியிட்டு உள்ளார்.

இது எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தேர்தலை இலக்குவைத்து தனது அரசியலுக்காக சொன்ன கருத்தாக இருக்கலாம். அவ்வாறு எனில், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது 1000 விகாரைகளை கட்டுவேன் என உறுதி அளித்த சஜித் பிரேமதாஸவை அவரது கட்சி ஆதரித்து இருந்த நிலையில், தற்போது விகாரைக்கு எதிராக குரல் கொடுப்பது ,மக்களை ஏமாற்றும் செயலே.

மன்னாரில் கிறிஸ்தவ , இந்து மதங்களுக்கு இடையில் முறுகல் நிலைமைகள் ஏற்பட்ட நிலைகளில் அவற்றை தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்காதவர்களே அவர்கள்.

இந்நிலையில் விகாரைகள் புதைகுழிகள் மீது அமை க்கப்பட்டு வருவதாக தற்போது கூறியுள்ளார், கடந்த காலங்களில் அரசபடைகளில் அவரின் ரெலோ அமைப்பு சேர்ந்து இயங்கியது என்பதன் அடிப்படையில், மனித புதைகுழிகள் தொடர்பில் அவருக்கு தெரிந்து இருக்கக்கூடும், அதன் அடிப்படையில் தனக்கு தெரிந்த விவரங்கள் மூலம், புதைகுழிகள் மீது விகாரைகள் அமைக்கப்படுவதாக தெரிவித்து இருக்கலாம்.

எம்மை பொறுத்தவரை இலங்கை ஒரு மத சுதந்திரமு-ள்ள நாடு. இங்கே எந்த மதமும் எந்த மதத்தையும் அடக்கி ஆள முயலக்கூடாது. பௌத்தர்களே இல்லாத பிரதேசங்களில் எதற்கு விகாரைகள். தேசிய நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தொல்பொருள் திணைக்களம் உட்பட சில அரசியல்வாதிகள் முயல்கின்றனர். அவற்றை அவர் கள் உடன் நிறுத்த வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார்.(05)

# பாதிக்கப்பட்ட பொலிஸ் குடும்பங்களுக்கு கல்முனையில் உலருணவு பொதி வழங்கல்



கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதார சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பொலி-ஸாரின் குடும்பங்களுக்கு பொலிஸ் திணைக்களத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை பொலிஸ் திணைக் களத்தின் 157 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திக அதிதியாக கலந்து கொண்டு குறிப்பிட்ட குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப்பொருள்களை வழங்கி வைத்தார்.

இதன் போது கடந்த கால யுத்தத் தின் போது உயிரிழந்த பொலிஸாரின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட பொலிஸாரின் உறவினர்கள், அங்க வீனமடைந்த பொலிஸ் உத்தி யோகத்தர்கள் உள்ளிட்டவர்களின் நலன்கள் குறித்து ஆராயப்பட்டன.

இதன்போது கல்முனை தலைமை யக பொலிஸ் பெருங்குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக், கல்முனை பொலிஸ் நிலையத்தி ன் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை தலைமை யக பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகரும் சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதிகாரியுமானஜயூப், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குமாரி, பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தரு மான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பயனாளிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# யாழ். பல்கலை மாணவிகள் பளு தூக்கலில் சாதனை

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 14 ஆவது மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ் பல்கலைக்கழக மாணவிகள் பளு தூக்கல் பிரிவில் 8 பதக்கங்களைப் பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வருடமே முதன் முதலாக பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் 5 தங்கம் , 2 வெள்ளி, 1 வெண்கல பதக்கம் என 08 பதக்கங்களை யாழ். மாணவிகள் கைப்பற்றியுள்ளனர். அதேவேளை ஆணொருவரும் தங்கபதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# விசுவமடுவில் தியாகி திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல்

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று விசுவமடு தேராவில் புதிய நிலா விளையாட்டு மைதானத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட சமூக செயற் பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)



காலைக்கதிர்
Kalaikkath

# காங்கேசன் துறையினூடாக 6000 சுற்றுலாவிகள் வருகை

## நேற்றுக் கொண்டாடியது பணிகம்

கோடிலியா சுற்றுலா கப்பல் மூலம்ஜூன்16முதல்9தடவைகளாக காங்கேசன்துறை ஊடாக யாழ்ப்பாணம் வந்த 6000க்கும் மேற்பட்ட சுற்றுலாவிகளை வரவேற்றுக் கொண்டாடும் நிகழ்வு வலி.வடக்குபிரதேசசபைகட்டடத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண சுற்றுலாத் துறைப் பணியகத்தின் ஏற்பாட்டில், யாழ் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் மற்றும் தூதுவரக அதிகாரி ராம் மகேஷ் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், சுற்றுலாவிகள் வரவேற்கப்பட்டதுடன், சுற்றுலாப் பயணிகளுக்குவரவேற்புஉபசாரம் வழங்கப்பட்டது. அவர்களுக்குப் போக்குவரத்துச்சேவையை வழங்கியவர்களும் நன்றி கூறி கௌரவிக்கப்பட்டனர்.

வடக்குமாகாணசுற்றுலாத்துறை பணியக தலைவர் பத்தி நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் தொடக்கத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்ட உள்ளூர்உற்பத்திகளுக்கானகாட்சிக் கூடங்களை இந்தியத் துணைத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர். உற்பத்தி மற்றும் விற்பனையாளர்களுக்கு சுற்றுலாப் பயணி களால் கிடைத்துவரும் நன்மைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதேபோல், சுற்றுலாப் பயணிகளுக்கான முச்சக்கரவண்டி, தனியார் வாகன சேவையை வழங்கி வரும் போக்குவரத்துச் சங்கங்கள் மற்றும் தனியார் வாகன உரிமையாளர்களுக்கும் அவர்கள் வழங்கிவரும் சேவைக்காக நன்றி பாராட்டப்பட்டது.

முதல் சுற்றுலாவிகளை வரவேற்கும் இந்த ஏற்பாட்டை களத்தில் ஒருங்கிணைத்துச் செயற்படுத்திவரும் தெல்லிப்பளை பிரதேசசெயலகம்மற்றும்வலிகாமம்வடக்குபிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கும் நன்றி பாரட்டப்பட்டது.

நிகழ்வின் சிறப்பம்சமாக, வலிகாமம் வடக்கு கட்டுவன் பகுதியைச் சேர்ந்த உள்ளூர் கலைஞர்களின் ஒயிலாட்ட நிகழ்வும் இடம்பெற்றது. அந்தக்கலைஞர்களும் நன்றி கூறிப் பாராட்டப்பட்டது.

தற்போதைய காலநிலைச் சூழல் காரணமாக அடுத்துவரும் மாதங்களில் கோடிலியா சுற்றுலாப் பயணக்கப்பல்சேவைநடைபெறாது என்றபோதும், மீண்டும் அடுத்த ஆண்டுஜனவரிமுதல்இந்தச்சேவை நடைபெறும் எனவும், மேலதிகமாக, காங்கேசன் - நாகபட்டினம் நாளாந்த கப்பல் சேவையும் அப்போது தொடங்கப்படும் என்றும், இதன்மூலம் வடக்கு மாகாண மக்கள் மேலும் பல நன்மைகளை அடைவர்என்றும்இந்தியத்துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் அங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.

# சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைக் கடத்தல் நேற்று முறியடிப்பு

## இரு பெண்களும் கைது

இலங்கைக்குத் தங்க நகைகளைக் கடத்த முயன்ற இரு பெண்களை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கட்டுநாக்க விமானநிலையத்தில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்..

அவர்களிடமிருந்து 3 கோடியே 72 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் தாம் பறிமுதல் செய்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களில்ஒருவர்26வயதான இந்தியர். மற்றையபெண்கொழும்பு ஜம்பட்டா வீதியைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 34.

கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்களும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் திணைக்கள அதிகாரிகளினால் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் மாடு முட்டி முதியவர் சாவு

(ந.லோகதயாளன்.)

நல்லூர் ஆலயத்திற்குள் மாடு முட்டியதில் அதன் பராமரிப்பாளர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நல்லூர் ஆலய பெருந்திருவிழாழவின் இறுதி நாளான தீர்த்தத் தினமானவியாழக்கிழமைமாலையில் அதன் பூங்காவில் உள்ள மாடுகளின் பராமரிப்பாளர் பூங்காவின் உள்ளே பணியில் இருந்த சமயம் திடீரென ஓர் மாடு அவரை முட்டியுள்ளது.

இதன்போதுபடிகாயமடைந்தவரை ஆலய உறசவகால முதலுதவியினர் நோயாளர் காவுதடியின் உதவியுடன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குளடுத்துச்சென்றுஅங்கிருந்து நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்ருசல சென்றனர்.

இருந்தபோதும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன்பே அவர் உயிரிழந்திருந்திருந்தார்.

# தியாக தீபம் திலீபனுக்கு பிரான்ஸிலும் நினைவேந்தல்






இந்திய அரசுக்கு எதிராக அகிம்சை வழியில் பட்டினிப் போராட்டம் நடத்தி உயிர்த் தியாகம் செய்த தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று பிரான்ஸிலும் தொடங்கியது.

தியாக தீபத்தின் 36ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு பிரான்ஸ் தலைநகர் பரிஸின் 10ஆம்வட்டாரத்தில்அமைந்துள்ள ஈழத் தமிழர்களின் குட்டி யாழ்ப்பாணம் எனப்படும் லா சப்பல் (la Chapelle) பகுதியில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

திலீபன் பட்டினிப் போராட்டம் நடத்திய 12 நாட்களுக்கும் தியாகதீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

லா சப்பல் பிரதான வீதியில் திலீபனின்பெரும்திருவுருவப்படம் வைக்கப்பட்டு இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெறுகின்றது. கவல்துறைமற்றும்நகரசபையின் அனுமதியுடன் இந்த அஞ்சலி நிகழ்வுஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இதனை பிரான்சை தளமாக இயங்கும் சே நூ தமிழ் என்று அமைப்பு முனெடுத்துள்ளது.

தியாக தீபம் திலீபனுக்கு நேற்று தாயகப் பகுதிகள் எங்கும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வுகள் தொடங்கின. நகரங்களில் ஆங்காங்கே அமைக்கப்பட்ட தனிப்பட்ட கொட்டகைகளில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

# வலுவூட்டல் செயலமர்வு

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்டசுகாதாரநிறுவனங்களில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக்கோவை தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு வியாழக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வு பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ். வீ.வஜிதாவால் இணைப்புச் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.அப்துல் வாஜித், பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமகுட்டி, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வஜிதா ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

சுகாதார நிறுவனங்களில் பணி யாற்றுகின்ற குறித்த உத்தியோகத்தர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய நிர்வாக நடைமுறைகள் மற்றும்நிதிப்பிரமாணங்கள், சுகாதாரத் துறைக்கு ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும் வளவாளர்களால் இந்நிகழ்வின்போது விரிவுரை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# பொலிஸ் காவலர் பணி இடைநிறுத்தம்

## போதைப் பொருள் பாவனையால்

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற பிரிவுக்கு உட்பட்டபொலிஸ்காவலர்ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் போதைப்பொருள் பயன்படுத்தியதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, ஹெரோயின் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தியமை உறுதியான பின்னர்கொழும்புதேசியவைத்திய சாலையின் சட்ட வைத்தியரிடம் ஆஜர்படுத்தப்பட்டதைஅடுத்துபணி இடைநிறுத்தம்செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பணி நிறுத்தம் வியாழக்கிழமைமுதல்அமுலுக்கு வந்துள்ளது.

# பாதிக்கப்பட்ட பொலிஸ் குடும்பங்களுக்கு கல்முனையில் உலருணவு பொதி வழங்கல்



தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திக அதிதியாக கலந்து கொண்டு குறிப்பிட்ட குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப்பொருள்களை வழங்கி வைத்தார்.

இதன் போது கடந்த கால யுத்தத்தின் போது உயிரிழந்த பொலிஸாரின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட பொலிஸாரின் உறவினர்கள், அங்கவீனமடைந்த பொலிஸ் உத்தியகபொலிஸ்நிலைய பிரதமபொலிஸ் பரிசோதகரும் சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதிகாரியுமானஜயூப்,கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குமாரி, பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தரு மான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின்உறுப்பினர்கள் பயனாளிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)


OKAYA ELECTRIC VEHICLES
dsl We lead the way...!
இந்தியாவில் அதிகம் விற்பனையாகும்
dsl OKAYA
மின்சார ஸ்கூட்டர்
குறைவான மாத செலவு
குறைவான பராமரிப்புச் செலவு
சந்தையில் உள்ள மிகவும் பாதுகாப்பான மின்கலங்கள்
நாடுமுழுவதும் பரந்துபட்ட முகவர் வலையமைப்பு.
FREEDOM
TOP SPEED 35 KMPH
60-65KM PER CHARGE
RS.550,000/-
FAAST-F2T
TOP SPEED 70 KMPH
80-85KM PER CHARGE
RS.780,000/-
FAAST-F4
குத்தகை வசதியுடன்
TOP SPEED 70 KMPH
140-160KM PER CHARGE
RS.990,000/-
Telescopic Suspension
All LED Lights with DRL
Remote lock and Unlock
Eco/city/sports Modes
Anti-Theft
உங்கள் OKAYA மின்சார ஸ்கூட்டர்
Lithium Ferrous Phosphate(LiFePo4)
பேட்டரிகளுடன் 2500 LIFECYCLES
SAFE
RELIABLE
EFFICIENT PERFORMANCE
DSL EV Experience Center :UNION PLACE COLOMBO 02
dsl douglas & sons (pvt) ltd.
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10
070 300 9555

# கொக்குத்தொடுவாயில் 17 எலும்புக்கூடுகள் மீட்பு அகழ்வுப் பணியின் முதற் கட்டம் நேற்று நிறைவு

(ந.லோகதயாளன்.)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில்இருந்துஇதுவரையில் 17 எலும்புக்கூடுகளின் மீட்கப்பட்ட நிலையில் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டது. தோண்டும் பணிகள் மீண்டும் ஒக்டோபர் மாதம் 3ஆம் வாரத்திற்குப் பின்பு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவரையில் குழி பாதுகாப்பாக மூடப்பட்டது.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போராளிகளின் புதைகுழி எனக் கருதப்படும புதைகுழியானதுசெப்டெம்பர்6முதல் நேற்றுவரைதோண்டப்பட்டது. அந்த புதைகுழியில் இருந்து நேற்றுவரை 17மனிதஎலும்புக்கூட்டுத்தொகுதிகள் மீட்கப்பட்டன.

இதேநேரம் நேற்றைய அகழ்விலும்இ.1302இலக்கதமிழீழ விடுதலைப்புலிப்போராளிஒருவரின் இலக்கத் தகடு மீட்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த அகழ்வுப் பணியில் முக்கிய பணியாற்றிய தொல்லியல் பேராசிரியரான ராஜ் சோமதேவ வெளிநாடு செல்வதனாலும் இதுவரை மீட்ட எலும்புக்கூடுகள் மற்றும் சான்றுப் பொருள்கள் தொடர்பில் நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும்அகழ்வுப்பணி நேற்றுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அகழ்வுப் பணிகளை மீண்டும் ஒக்டோபர் 3ஆம்வாரத்தில்மீண்டும் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பேராசிரியர் வெளிநாடுசெல்லமுன்புநீதிமன்றிற்கு இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேநேரம் இப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மேலதிக பொருள்களான மைமேலேடி ரொபி பேப்பரில் உள்ள தொடர் இலக்கம் மற்றும் உற்பத்தி திகதி என்பவற்றைக் கண்டறியும் முயற்சியும் இடம்பெறுகின்றது. அதன் மூலம் இந்தப் புதைகுழி எந்தக் காலப்பகுதிக்குரியது என்பதைத் தீர்மானிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

இதேநேரம் பல ஆண்டிற்கு முன்னர் வந்த விக்ஸ் ரொபியின் மேலுறையும் புதைகுழிக்குள் இருந்துகண்டுகொள்ளப்பட்டதனால் அதன் தயாரிப்புக் காலங்களை கண்டறியும் முயற்சியும. மேற்கொள்ளப்படுகின்றது.

## மயானம் அமைக்கும் முயற்சியால் இனங்களுக்கு இடையே முறுகல்

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்






வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தமிழ்கிராமமான கருப்பனிச்சாங்குளம் கிராமத்தில் உள்ள விவசாய நிலம் அருகில் உள்ள கொக்குவெளி பகுதி சிங்கள மக்களின் மயானம்என்றுகூறி அதனை அளவீடு செய்யவதற்கு அரச அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையால் அங்கு நேற்றுப் பதற்றம் ஏற்பட்டது. தமிழ் சிங்கள் மக்கள் மத்தியில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து அளவீட்டுப் பணிக்காக வந்த நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

கருப்பனிச்சான்குளம் தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் கிராமம். போர் காரணமாக அங்கிருந்த மக்கள் இடப்பெயர்ந்து சென்றதுடன், போர் முடிவடைந்தபின்மீளக்குடியமர்ந்தனர். அங்கேயே விவசாயமும் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமத்தில் தமதுமயானம்இருந்ததாகத்தெரிவித்து

அருகில் உள்ள கொக்குவெளி சிங்கள கிராம மக்கள் இரு பிக்குகளின் தலைமையில் காணிகளை ஆக்கிரமிக்கமுயற்எடுத்துவருகின்றனர்என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கிராமத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான விவசாய காணி ஒன்றினை தமது மயானக் காணி என்று அவர்கள் உரிமை கோரி வருகின்றனர். அந்தக் காணி சொந்தமாகவுள்ள தமிழர் தமது மயானத்தை ஆக்கிரமித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பில்குறித்தகாணியினை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தி வரும்கருப்பனிச்சாங்குளம்கிராமத்தை சேர்ந்த நபர் கருத்து தெரிவிக்கையில்,

"இது எனது பரம்பரைக் காணி. இங்கு எனது மூதாதையர்கள் முதல் நாங்கள் வரை நீண்ட காலமாக குடியிருந்து வருகின்றோம். பின்னர் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் மீண்டும் வந்து காணியில் விவசாயம் செய்து வருகின்றேன். தற்போது எமது காணியில் காய்க்கும் நிலையில் பெரிய தென்னை மரங்களும் நிற்கின்றன.

இந்நிலையில் எனது காணியில் சிங்கள மக்களுக்கான மயானம் இருந்ததாக கூறி, அதனை மீள அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு,எனதுகாணிக்கான அனுமதி பத்திரத்தைகூட பிரதேச செயலகத்தால் வழங்காமல் முடக்கி வைத்துள்ளனர்.

எனது காணியில் முன்பு மயானம் இருந்தமைக்கான எந்தச் சான்றுகளும் இல்லை. அல்லது சடலங்கள் புதைக்கப்பட்டமைக்கான சான்றுகள்கூட இல்லை. குறித்த சிங்கள கிராமத்திற்கு அண்மையில் மூன்று மயானங்கள் உள்ளன. அவர்கள் அங்கு சடலங்களை புதைக்க முடியும். தற்போது எனது காணியைச் சுற்றி தமிழ் மக்கள் குடியமர்ந்துள்ளனர். எனவே இங்கு மயானம் அமைக்கும் செயற்பாட்டைமுன்னெடுப்பதுநீதியான செயற்ப்பாடாகத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பகுதிக்கு பிக்கு இருவரின் தலைமையில் வருகை தந்த சிங்கள மக்கள் குறித்த காணியில் தங்களது மூதாதையர்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த காணியில் மயானம் அமைப்பதற்காக அதனை மீட்டுத்தருமாறும் பிரதேச செயலாளரிடம் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் பொலிசார் இரு தரப்புடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். குறித்த காணி 1967 ஆம் ஆண்டில் மயானமாக இருந்ததாக நில அளவைத்திணைக்களத்தின் கள ஆய்வு குறிப்பில் இருப்பதாக பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

எனினும், நில அளவைத் திணைக்களத்தின் 2019 அறிக்கையின் படி அது வன இலாகாவிற்குரிய காணியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மயானம் இருந்ததாக எந்த பதிவுகளும் இல்லைஎனதமிழ்மக்கள்தெரிவித்தனர். இதனையடுத்து பிரதேச செயலாளர் மற்றும் பொலிசாருடன் முரண்பட்ட தமிழ் மக்கள், இப்படி ஒரு மயானம் இருப்பதாக பிரதேச சபையின் அறிக்கையில்கூட இல்லை. நாம் இந்த காணியை அளவீடு செய்வதற்கு இடமளிக்கமாட்டோம். மயானம் அமைப்பதற்கு சிங்கள கிராமத்திலேயே பல அரச காணிகள் இருக்கின்றது. அங்கு அதனை அமைக்க முடியும் என

தெரிவித்ததுடன், நீண்டகாலமாக குடியிருக்கும் நிலையில் நீதிமன்றம் ஊடாக இதற்கு தீர்வைக் காணுமாறும் தெரிவித்தனர்.எனினும், காணியை நில அளவீடுசெய்து சிங்கள மக்களின் மயானத்திற்காக ஒதுக்குமாறு பௌத்த மதகுரு வருகை தந்த அதிகாரிகளிடம் பலமுறை வலியுறுத்தினார்.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் சென்று அடுத்த கட்டநடவடிக்கையைஎடுக்குமாறுபிரதேச செயலாளர் இருதரப்புக்கும் தெரிவித்ததுடன், அதுவரை தற்காலிகமாக அயலில் உள்ள மயானத்தில் இறந்தவர்களின் சடலங்களை புதைக்குமாறும் சிங்கள மக்களுக்கு தெரிவித்திருந்தார். இதனையடுத்து நிலமை சீராகியது.(100)

## பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் மீளவில்லை

### 8 மாதங்களில் 11.5 வீதத்தால் சுருக்கம்

வெளிநாட்டு கடன்கள் திருப்பி செலுத்தாமலே எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆகவே பொருளாதாரநெருக்கடியில்இருந்து நாடுமீளவில்லை. நிறைவடைந்த எட்டுமாத காலத்துக்குள் பொருளாதாரம் 11.5 சதவீதத்தால் சுருக்கமடைந்துள்ளது.

இப்படி சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்றஉறுப்பினருமானநாலக கொடஹெவா தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில்வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மீதான உரையின் போதுஏற்றுமதிபொருளாதாரத்தை மேம்படுத்துவதாக குறிப்பிட்டார்.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரத்தை உறுதிப்படுத்த நடைமுறைக்கு சாத்தியமான எந்ததிட்டங்களையும்அரசாங்கம் இதுவரை செயற்படுத்தவில்லை.

அரசின் முறையற்ற வரிக் கொள்கையினால் தேசிய தொழிற்றுறை பெரும் நெருக்கடிக்குள்ளாகி ஏற்றுமதி பொருளாதாரம் வீழ்ச்சிடைந்துள்ளது.

நிறைவடைந்த 8 மாத காலப்பகுதிக்குள்மாத்திரம்ஏற்றுமதி பொருளாதாரம் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.அத்துடன் இறக்குமதி செலவு 18 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.இறக்குமதி செலவு குறைவடைந்துள்ளதை சாதகமான நிலையாக கருத முடியாது.

நாட்டின் பிரதான ஏற்றுமதி பொருளாதார தொழிற்றுறையாக காணப்படும் ஆடை உற்பத்தி தொழிற்றுறை பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு நிறைவடைந்த 8 மாத காலத்துக்குள் ஆடை ஏற்றுமதி தொழிற்றுறை வருமானம் 18 சதவீதத்தால்குறைவடைந்துள்ளது.

மறுபுறம் வரி அதிகரிப்பு, மூலப்பொருட்களின் விலையேற்றம் ஆகிய காரணிகளால் தேசிய மட்டத்திலான சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சிறுமற்றும்நடுத்தரகைத்தொழில் துறைகளுடனான ஏற்றுமதி வருமானம் 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

முன்னாள்ஜனாதிபதிகோட்டபய ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் தேசியமற்றும்பூகோளமட்டத்தில் பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெற்றது. இருப்பினும் 2021 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 3.1 சதவீதத்தால் உயர்வடைந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும்காலத்தில்பொருளாதாரம் முன்னேற்றமடையவில்லை.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம் என பொதுஜன பெரமுனவினர் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால் 2023 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் பொருளாதாரம் 11.5 சதவீதத்தால் சுருக்கமடைந்துள்ளது.ஆகவே ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகியுள்ளது.

எரிபொருள்,எரிவாயு ஆகிய அத்தியாவசிய தேவைகள் தடையின்றி கிடைக்கப் பெறுகிறது.ஆகவேபொருளாதாரநெருக்கடியில் இருந்து மீண்டு விட்டோம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவது முற்றிலும் தவறானது.

2022.04 காலப்பகுதியில் இருந்து வெளிநாட்டு கடன்கள் அதற்கான வட்டி செலுத்தப்படுவதில்லை.கடன் செலுத்தாதால் ஒவ்வொரு மாதமும் மீதமாகும் நிதியை கொண்டு எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

எதிர்காலத்தில்கூடவெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு நெருக்கடிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

## சர்வதேச நிபுணர்களின் துணையுடன் சனல் -4 காணொலி பற்றி விசாரியுங்கள்

### கரு ஜெயசூரிய வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை பின்னணி தொடர்பில் சனல் –4 தொலைக்காட்சி ஒளிபரப்பி இருக்கும் காணொலி தொடர்பில் சர்வதேச நிபுணர்களின் துணையுடன் விசாரணைகளை நடத்தவேண்டும் என்று ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார் சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவர் கரு ஜயசூரிய.

உண்மையை அறிந்துகொள்ளும் பூரண உரிமை இந்த நாட்டு மக்களுக்கு இருக்கிறது என்று தெரிவித்த அவர், அதனால் அதுதொடர்பான விசாரணைகளைத் தாமதிக்காமல் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நிபுணர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளவேண்டும் என்றார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டிருந்த விடயங்கள் ஊடாக வெளிப்படுத்தி இருக்கும் விடயங்கள் முறையான விசாரணை இல்லாமல் ஒருபோதும் ஒதுக்கிவிட முடியுமானவிடயங்கள்அல்ல.அதனால் இதன் மூலம் வெளிப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக சரியான ஆய்வொன்றை மேற்கொண்டு, பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால்அதுஇலங்கையின்எதிர்காலத்துக்கு மிகவும் மோசமான அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என்பது எமது நிலைப்பாமாகும்.நாடு என்ற ரீதியில் பார்க்கும்போது அது இந்த நாட்டின் இனம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பெறுபேற்றை வழங்க முடியும் என்பதுடன் சர்லதேச ரீதியில் பார்க்கும் போதுஅவ்வாறானதொருநிலைநாட்டின் நற்பெயருக்கும்பாதிப்பை ஏற்படுத்தும்.

உயிர்த் ஞாயிறு தாக்குதலுக்கு ஏற்புடையதாக கவனத்திற்கொள்ளப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக இதற்குமுன்னரானசந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றின் ஊடாகவும் பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாகவும் விசாரணை மேற்கொண்டிருக்கிறது.சனல்4வெளிப்படுத்தலின் பின்னரும் அதுதொடர்பாக தேடிப்பார்க்க இரண்டு விசேட விசாரணைகளுக்கு செல்வதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

இதன்போது நாங்கள் கவனம் செலுத்துவது அவ்வாறு மேற்கொள்ளப்படும்எவ்வாறானதாருெவிசாரணையிலும் குற்ற விசாரணை தொடர்பான நிபுணத்துவமுடையமற்றும்அதுதொடர்பான அனுபவம் உள்ள விசேட குழுவொன்றின் பங்கேற்பு இருக்க வேண்டும்.அத்துடன் அதன் விசாரணைகளின்முன்னேற்றத்தின்அடிப்படையில் அதற்கு பொறுப்புக்கூறவேண்டிய எந்த தராதரங்களில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டரீதியிலாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமான நிலைமையை அந்த விசாரணை குழுவுக்கு இருக்க வேண்டும்.இதற்கு மேலதிகமாக இதன்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதுடன் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக பாரிய சமூககருத்தாடல்ஒன்றைகட்டியெழுப்புவதற்காகசிலகுழுக்கள்மேற்கொண்ட பிரசாரங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனத்திற்கொள் ளவேண்டும்.

மலட்டு மருந்து, மலட்டு கொத்து ராட்டெடி மற்றும் மலட்டு சத்திரசிகிச்சை போன்றவகையில் பல்வேறு பரிமாணங்கள் ஊடாக வெறுப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தவர்கள் தொடர்பாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமைகள் மூலம் பல்வேறு கொடூரமான செயற்பாடுகளுக்கு நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாக சாட்சிகள் இருக்கும் சில அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் இதன்போது கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது.

NIPPON PAINT
THE COATINGS EXPERT

# ATOM 2-in-1

Asia Pacific No.1

3 வருட உத்தரவாதத்துடன்

# சிறந்த சேமிப்புடன்

## வெளியே உள்ளே

## 2-in-1

# சிறந்த பெயின்ட்




**NIPPON PAINT ATOM 2-IN-1**

இது உட்புற மற்றும் வெளிப்புற மேற்பரப்புகளுக்கு ஏற்றதாக அமைகிறது. விரிவான R&D Ig பின்பற்றி, எங்கள் அலங்காரப் பங்காளர்களின் உள்ளீடுகளைக் கேட்டு, மாற்றியமைக்கப்பட்ட Acrylic emulsion அடிப்படையிலான அதிகபட்ச செயல்திறனுக்காக இந்த டைனமிக் பெயின்ட் உருவாக்கப்பட்டுள்ளது.

- தீங்கு விளைவிக்கும் மாசு வாயுக்களை வெளியிடுவதில்லை
- உட்புற மற்றும் வெளிப்புற சுவர்கள் இரண்டிற்கும் பயன்படுத்தலாம்
- குறைந்த ஆவியாகும் கரிம கலவைகள் அடங்கியது.
- கழுவக்கூடியது/துடைக்கக்கூடியது
- மேற்பரப்பை சுத்தம் செய்வதை எளிதாக்குகிறது
- அதிகபட்ச செயல்திறன்
- சுற்று சூழலுக்கு நேயமானது
- சுவர்களை சுத்தம் செய்தல் இலகுவானது




www. nipponpaint.lk

ISO 14001 : 2015

Environmentally Friendly Paint

**NIPPON PAINT LANKA (PVT) LTD**
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk
A product of ISO 9001 : 2015 certified company

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2023இல் வெளியிடப்பெற்றது.